Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 08    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 04    (15-02-1993)    திங்கட்கிழமை    ஓசை 863

## யாழ். வைத்தியசாலையில் 216 இரட்டை பிரசவங்கள்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த இரண்டு வருடங்களில் 216 இரட்டைப் பிரசவங்கள் இடம்பெற்றுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. 1991 இல் 97 இரட்டைப் பிரசவங்களும் 1992 இல் 119 இரட்டைப் பிரசவங்களும் இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்விரண்டு ஆண்டுகளில் 580 பிரசவங்களின் பின் பிள்ளைகள் இறந்துள்ளனர் எனவும் 481 பிரசவங்களின்போது பிள்ளைகள் இறந்து பிறந்துள்ளன. எனவும் தெரியவருகிறது. அத்துடன் 8471 பிரசவங்கள் இவ்விரு ஆண்டுகளிலும் நிகழ்ந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவு குழுவின் தீர்வு திட்டம் ஒரு வாரத்தில் தயாராகும்

## பாராளுமன்றத்தில் மாத இறுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கவென சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதிமுடிவை இம்மாத இறுதியில் பாராளுமன்றத்தில் வெளியிடும் என கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இதேவேளை, அடுத்த வாரத்திற்குள் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை தயாராகிவிடும் எனவும் அவ்வட்டாரங்களில் இருந்து மேலும் தெரியவருகின்றது.

இறுதி அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இவ் அறிக்கை பாராளுமன்றத் தெரிவுக் குழுவால் பரிசீலிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1991 ஆகஸ்ட் மாதம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆலோசனை வழங்கவென மங்கள முனசிங்க தலைமையில் நியமிக்கப்பட்ட இக்குழு இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தெரிவுக்குழு 1500 பக்கங்களைக் கொண்ட ஆலோசனைகளைக் கொண்டு இறுதி முடிவுக்கு வரவேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அடுத்த வாரத்தில் தெரிவுக்குழு அறிக்கை தயாராகிவிடும் என தெரிவிக்கப்படுகிறது.

## விசைப்படகு கொள்வனவிற்கு சிறிலங்கா அதிகாரிகள் பிரான்ஸ் சென்றனர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்த பிரான்சிடமிருந்து இரண்டு அதிவேக விசைப்படகுகளை சிறிலங்கா அரசு விரைவில் கொள்வனவு செய்யவுள்ளது.

பிரான்ஸ் தயாரிப்பான இரண்டு வேகப்படகுகளையும் பார்வையிடவும் இதனை இயக்குவது தொடர்பான பயிற்சிகளைப் பெறவும் இரண்டு பொறியியலாளர்கள் உட்பட பதினாறுபேர் சிறிலங்கா தலைநகர் கொழும்பிலிருந்து நேற்று பிரான்ஸ் பயணமாகிவிட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆகஸ்ட் மாதத்திற்கிடையில் வ்விரு படகுகளும் சிறிலங்காவுக்குக்கொண்டுவரப்படும் எனவும் இவற்றின் பெறுமதி 360 மில்லியன் ரூபா எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இப்படகுகள் கொண்டுவரப்பட்டதும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்குப் பயன்படுத்துவதற்காக சிறிலங்கா கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படும் எனவும் பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தபால்களைஉடைத்துபார்க்க தமிழ் குழுக்கள் நியமனம்

கொழும்பில் தேங்கியுள்ள வடபகுதிக்கான வெளிநாட்டு தபால்களை உடைத்து வாசிப்பதில் இதுவரை, இராணுவம் ஈடுபட்டு வந்தது. தற்பொழுது இராணுவத்தின் தலைமையில் கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எழுதும் கடிதங்களை இனங்கண்டு அவர்கள்மீது அழுத்தங்களை ஏற்படுத்த இது வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

சென்ற மாதம் வெளிநாட்டு தபால்களை உடைத்ததன் மூலம் சுமார் இரண்டரை லட்சம் அமெரிக்கடாலர் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து சகலவெளிநாட்டுக் கடிதங்களையும் உடைத்துப் பார்க்குமாறு கூட்டுப்படை தலைமையலுவலகம் உத்தரவிட்டிருப்பதாக தெரிய வருகின்றது

இதேவேளை கொழும்பில் தேங்கியுள்ள வெளிநாட்டு தபால் பொதிகளை அனுப்பி வைக்குமாறு வடமாகாண அஞ்சல் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று தெரியவருகின்றது. (நி)

## 200 தமிழ் வாலிபர் மீது வழக்கு தொடர முடிவு

சென்ற காலங்களில் கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பை தொடர்ந்து கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருக்கும் தமிழ்இளைஞர்கள், யுவதிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

சுமார் 200 இற்கு மேற்பட்ட இளைஞர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## விடுதலைப்புலிகள் நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' (குரல் 36) தை-மாசி இதழ் நாளை வெளிவருகின்றது. இந்தியச் சதியில் சிக்கி வங்கக்கடலில் காவியமான தளபதி கிட்டு மற்றும் ஒன்பது வீரர்களையும் நினைவு கூரும் இச்சிறப்பிதழுடன் தளபதி கிட்டுவின் படமும் விசேட இணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளது.

'இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் வேண்டும்' என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கமும் வெளிவந்துள்ளது.

### எறிகணை வீச்சு

அளவெட்டி, ஏழாலைப் பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் அகோர எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுமாலை முதல் நள்ளிரவு வரை மேற்படி பகுதிகளை நோக்கி நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலால் அளுக்கை அளவெட்டியைச் சேர்ந்த பி. லலிதா (வயது 27) என்ற இளம் பெண் காயமடைந்துள்ளார்.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## புலிகளுடனான பேச்சுகள்; ஐ. நா. அதிகாரிகள் ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி நேற்று கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு சென்று அங்கிருந்து கொழும்பு செல்வார் என்று தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக நாளை கொழும்பு ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தில் விரிவாக ஆராயப்பட இருப்பதாகவும் இதனை தொடர்ந்து மிகவிரைவில் அரசாங்க தரப்பினருடன் கலந்தாலோசிக்கப்பட இருப்பதாகவும் அறிய வருகின்றது. (நி)

## மனித உரிமை பேண அரசை நிர்ப்பந்திக்குக

### அமெரிக்க குழு கோரிக்கை

இலங்கையில் மனித உரிமைகளை அரசு மீறிவருவதனால் அங்கு மனித உரிமைகள் பேணப்படுவதற்கு அரசை நிர்ப்பந்திக்கும் வகையில் முக்கிய சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் உடனடியாகத்தலையிட வேண்டுமென அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஒன்று வற்புறுத்தியுள்ளது. வாஷிங்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் கொங்கிரஸ் மனித உரிமைகள் மன்றம் என்ற அமைப்பே இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இவ் அமைப்பு அதன் பாராளுமன்ற தொடர்புகள் பணிப்பாளர் போல் டி. டபிள்யு மில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அதிகாரி - ஆயர் நேற்று சந்திப்பு

## கைதடி வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த 10 வேங்கைகளுக்கு

தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எழுதும் கடிதங்களை இனங்கண்டு அவர்கள்மீது அழுத்தங்களை ஏற்படுத்த இது வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதம் வெளிநாட்டு தபால்களை உடைத்ததன் ... வருகின்றது.

இதேவேளை கொழும்பில் தேங்கியுள்ள வெளிநாட்டு தபால் பொதிகளை அனுப்பி வைக்குமாறு வடமாகாண அஞ்சல் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று தெரியவருகின்றது. (நி)

## 200 தமிழ் வாலிபர் மீது வழக்கு தொடர முடிவு

சென்ற காலங்களில் கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பை தொடர்ந்து கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருக்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய பொலிசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

சுமார் 200 இற்கு மேற்பட்ட இளைஞர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கிளாலியில் ஷெல் வீச்சு 4 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

கடந்த இரவு 7 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளாலி பகுதி நோக்கி ஏவப்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் வீட்டின் முன்னாக அமர்ந்திருந்த வஸ்தியாம்பிள்ளை இராசநாயகம் (வயது 64) என்பவரும் இவரது மனைவியான திரேசம்மா (வயது 52) மைத்துனர் மிக்கேல் சூசைமுத்து (வயது 55) மற்றும் மாதகலில் இருந்து இடம்பெயர்ந்து கிளாலியில் தங்கியிருந்த சேவியர் அமலநாயகி (வயது 14) ஆகியோர் படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சூசைமுத்து என்பவரின் முகம் எரிகாயங்களுக்குள்ளானது. எறிகணை வெடித்த அதிர்ச்சியால் இராசநாயகம் செவிப்புலன் இழந்தார். இதேவேளை நேற்று மாலை 4 மணியளவில் கிளாலி கடற்கரையை அண்மித்த இரணைமடு பீரங்கிப் படகுகள் கரையோர பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டன. ஆயினும் இத்தாக்குதல்களால் எதுவித சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமா பதவி விலகினால் விவாதத்திற்கு தயார்

### - சிறிமாவோ அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலகி தேசியப் பிரச்சினைகள் குறித்த பொது விவாதத்திற்கு இடமளிக்கும் வகையில் சுதந்திரமான தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயகா நேற்று பிரேமதாசாவிடம் வலியுறுத்தியுள்ளார்.

பிரேமதாசா உடனடியாகப் பதவி விலகினால் மட்டுமே பிரேமதாசா அரசின் பொருளாதாரக் கொள்கைகள் குறித்த பொது விவாதத்திற்கு தான் ஒப்புக்கொள்ள முடியும் என சிறிமாவோ பண்டாரநாயகா பிரேமதாசாவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என தெரியவருகிறது.

மேலும் இடைக்கால அரசின் கீழ் பொதுத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் எனவும் பிரேமதாசாவின் பொருளாதாரத் திட்டங்கள் வட-கிழக்கு இன பிரச்சினையில் பிரேமதாசாவின் அணுகுமுறை சட்டத்திற்கு புறம்பான விதத்தில் பலரைக் கைது செய்து கைதிகளை சித்திரவதை செய்தல் போன்றவை குறித்த பொதுவான எண்ணங்களைக் களைவதற்கு தேர்தல் பிரசார மேடைகளே தகுந்த இடமென்றும் அவர் கூறியுள்ளார்.

... வாசி பரிசீலிக்கப்பட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

... நியமிக்கப்பட்ட குழு இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ள ...

... முடிவுக்கு வரவேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப் ...

## புலிகளுடனான பேச்சுகள்; ஐ. நா. அதிகாரிகள் ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்த அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி நேற்று கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு சென்று அங்கிருந்து கொழும்பு செல்வார் என்று தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பாக நாளை கொழும்பு ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தில் விரிவாக ஆராயப்பட இருப்பதாகவும் இதனை தொடர்ந்து மிகவிரைவில் அரசாங்க தரப்பினருடன் கலந்தாலோசிக்கப்பட இருப்பதாகவும் அறிய வருகின்றது. (நி)

## ஐ. நா. அதிகாரி - ஆயர் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலய ஜெனிவா தலைமையகத்தை சேர்ந்த ஆலோசகரான திரு. ரீயூட்டர் நேற்று யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகத்தை சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது யாழ். ஆயர் யாழ் குடாநாட்டிற்கு பாதை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், தமிழ் மக்கள் குறிப்பாக யாழ். குடாநாட்டு மக்கள் மீது இராணுவம் ஏற்படுத்தியுள்ள அழுத்தத்தை எடுத்து கூறியுள்ளார் என தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டு மக்கள் ஓர் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்றும் இது பற்றி தாம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியதை நினைவுபடுத்தியதுடன், இதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து பிரதிநிதிக்கு விளக்கியதாகவும் தெரியவருகின்றது. (நி)

## போதனாசிரியர் பதவி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்விப் போதனாசிரியர் பதவி நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. கீழ்க்காணும் நிலையங்களுக்கு விண்ணப்பித்தோரை அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பின்வரும் நேரங்களில் சமூகமளிக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி, 9.30 மணிக்கு கரவெட்டி, 10.00 மணிக்கு பருத்தித்துறை, 11.00 மணிக்கு வடடுக்கோட்டை ஆகிய நிலையங்களுக்கு விண்ணப்பித்தோரும், பிற்பகல் 1.00 மணிக்கு கோப்பாய் 2.00 மணிக்கு தெல்லிப்பழை, 3.00 மணிக்கு மருதனாமடம் 4.00 மணிக்கு வேலணை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் 3.30 மணிக்கு நல்லூர், 4.00 மணிக்கு அனைத்து நிலையங்களிற்குமான ஆங்கில போதனாசிரியர் தெரிவு என்பவற்றிற்கு விண்ணப்பித்தோரும் சமூகமளிக்கும்படி யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

## 81 படையினருக்கு பட்டமளிப்பு

கொத்தலாவலை பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சிபெற்ற எண்பத்தொரு பட்டதாரி இராணுவத்தினருக்கான பட்டமளிப்பு நேற்று முன்தினம்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மனித உரிமை பேண அரசை நிர்ப்பந்திக்குக

### அமெரிக்க குழு கோரிக்கை

இலங்கையில் மனித உரிமைகளை அரசு மீறிவருவதனால் அங்கு மனித உரிமைகள் பேணப்படுவதற்கு அதனை நிர்ப்பந்திக்கும் வகையில் முக்கிய சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் உடனடியாகத் தலையீடு செய்ய வேண்டுமென அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஒன்று வற்புறுத்தியுள்ளது. வாஷிங்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் கொங்கிரஸ் மனித உரிமைகள் மன்றம் என்ற அமைப்பே இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

இவ்வமைப்பு அதன் பாராளுமன்ற தொடர்புகள் பணிப்பாளர் போல் டி டபிள்யு மி...

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடி வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த 10 வேங்கைகளுக்கு நினைவுக் கல் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கடந்த 1987 ஆம் ஆண்டு நாவற்குழியில் இருந்த சிறிலங்கா இராணுவ முகாமை தாக்கி அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பத்துபோராளிகளதும், பொதுமக்களினதும் நினைவாக மாபெரும் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று நேற்று கைதடியில் நடைபெற்றது.

கைதடி வடக்கு பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக உள்ள மைதானத்தில் வீரச்சாவடைந்த போராளிகளதும் பொதுமக்களினதும் நினைவாக நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. அதுடன் போராளிகளது உருவப் படங்களும் திரைநீக்கம்செய்து வைக்கப்பட்டன.

ஈகைச்சுடர் ஏற்றும் வைபவத்துடன் ஆரம்பித்த இந்த வைபவத்தில் விடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு சங்கர் அண்ணா நினைவுக்கல்லைத் திறந்துவைத்தார். இதற்குத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் மலர்மாலை அணிவித்தார். மாவீரர்களது உருவப்படங்களை விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகி திறந்து வைத்தார். இப்படங்களுக்கு இம்மாவீரர்களது உறவினர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

"எமது போராட்டவரலாற்றில் நாம் பெரும் இழப்புக்களைச்சந்தித்துள்ளோம். இவ்வாறான இழப்புக்களுக்கு மத்தியிலேயே எமது போராட்டத்தை நாம் நகர்த்துகின்றோம் இவ்வாறான இழப்புக்களே எமது போராட்டத்திற்கு உறுதியையும். உத்வேகத்தையும் கொடுக்கது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளில் வசிக்கும் 50,000 தமிழரை திருப்பி அனுப்ப ஈ. பி. டி. பி. கோரிக்கை

(கொழும்பு)

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் 50,000 தமிழர்களை திருப்பி அனுப்ப வேண்டும் என ஈ. பி. டி. பி. யினர் அந்நாடுகளின் அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

இந்நாடுகளில் அகதிகளாக வசிக்கும் தமிழர் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதாகவும், நிதிகளைத் திரட்டி தீவிரவாதச் செயல்களுக்கு அனுப்பி வருவதாகவும், இதன் மூலம் சிறிலங்காவின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் ஈ.பி. டி. பி. யைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் தெரிவித்துள்ளார்

இவர்கள் இந்நாடுகளில் இருக்கும் வரை அங்கு சமூக விரோதச் செயலைக் கட்டுப்படுத்த முடியாது எனவும் எனவே மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தங்கியுள்ள 50,000 தமிழர்களையும் திருப்பி அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தகவல்களை "லங்காதீப" பத்திரிகை வெளியிட்டுள்ளது.


உளவாளிகள்!!!

அவதானமாக இருக்கவும்..!

கண்ட இடங்களில் கூடிநின்று இரகசியம் கதையாதீர்

## குண்டு வெடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் மணிக்கூட்டுக்கோபுரத்தின் கீழ் கடந்த 4ஆம் திகதி காலை 9-30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவு பொலிசார் அப்பகுதியில் நடமாடியபோதும் இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. அவ்விடத்தில் பல மணிநேரமாக பூசனிக்காய் ஒன்று காணப்பட்டதாகவும் அதனையிட்டு எவரும் கவனம் செலுத்தவில்லை எனவும் குண்டு பூசனிக்காயினுள் வைக்கப்பட்டிருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலட்சார்ச்சனை

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தினரால் நடாத்தப்படும் மாசிமக இலட்சார்ச்சனை விழா 26-02-93 வெள்ளிமுதல் 7-3 93 ஞாயிறு வரை நடைபெறும். 10-வது தினத்தன்று காலை சங்காபிஷேகமும், மாலை உற்சவமும் விசேடமாக நடைபெறும்.

## நன்கொடை

சனசமூக நிலையங்களுக்கு மேலதிக நன்கொடை வழங்குவதற்கு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி மேலதிக நன்கொடை சனசமூக நிலையங்களில் ஏற்படும் காகிதாதிகளுக்குரிய செலவினங்களிற்கு பயன்படுத்த உதவியாக வழங்கப்படவுள்ளதென அறிவக்கூடியதாகவுள்ளது.

## தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிப்பு

(பருத்தித்துறை)

தவில் வித்துவான் திரு. சண்முகவடிவேல் ஜெயநாதனுக்கு ''கானசாகரம்'' பட்டமளிக்கப்பட்டுத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. பருத்தித்துறை தும்பளை தம்புருவளை சித்திவிநாயக ராலய பரிபாலன சபையின் சார்பில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வ வே. தியாகராஜக்குருக்களால் திரு. ஜெயநாதனுக்கு 'கானசாகரம்'' பட்டமளிக்கப்பட்டு தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. (25)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-2-15

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ செல்வன் (மத்தக்குட்டி மகேந்திரன் - பெரிய வெளி, மூதூர் - திருமலை)

திருமலை - மூதூர் மல்லிகைத்தீவுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ நவம் (கதிர்காமத்தம்பி நவரட்ணராஜா - பள்ளிக்குடியிருப்பு, மூதூர் - திருமலை)

மட்டக்களப்பிற் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொலைப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

யாழ்ப்பாணத்திற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இவாலை, பெரியவிளானைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1988ஆம் ஆண்டு மட்டு - இருதயபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய-

கப்டன் சயேசன் (ஜோசப் ரவிச்சந்திரன் - இருதயபுரம் மேற்கு - மட்டு.)

1989ஆம் ஆண்டு யாழ் - காரைநகர்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

2ம் லெப். சந்திரன் (நாகலிங்கம் சந்திரகுமார்- இலந்தைச்சோலை, காரைநகர்- யாழ்.)

கண்ணன் (குமாரசாமி தவயோகராசா - வேதரடைப்பு, காரைக்கூடல், காரைநகர் வடக்கு - யாழ்)

முல்லைத்தீவு - முள்ளியவளைப்பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் சுடடுக் கொலைப்பட்ட

நாட்டுப்பற்றாளரான-

செல்வரட்ணம் சுதர்சன் - சுதன் (முள்ளியவளை - முல்லைத்தீவு)

யாழ் - உடுப்பிட்டி முகாமில் வைத்து இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சகோதரிகளும், ஆசிரியைகளுமான 2 தமிழ் பெண்கள் - மாவிட்டபுரத்தில் வைத்து இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டு, முகாமில் வைத்து மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்து கொலைப்பட்டு. பின்னர் சுன்னாகம், சூராவத்தைப் பகுதியிலிருந்து அம்மியுடன் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு உன்னிச்சைப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

லெப். ஈழமணி (முத்தையா மனோகரன் - 1-ம்வட்டாரம், புதுவழி வீதி, களுவாஞ்சிக்குடி - மட்டு.)

யாழ் - கட்டுவன் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

முத்தரசன் - முத்தன் (சுந்தரலிங்கம் சுரேஸ்குமார் - ஐந்துசந்தி, மானிப்பாய் வீதி, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/6015)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
10. 10. 1932

உதிர்வு:
26. 02 1992

**S. R. VIDEO சென்ரர் உரிமையாளர்**

அன்பின் அரவணைப்பாய்
பாசத்தின் பரிணமிப்பாய்
எங்களை வளர்த்து ஆளாக்கிய
அன்பு அப்பாவே
நீங்கள் வாழ்ந்த நாள் முழுவதும்
எமக்காகவே வாழ்ந்தீர்கள்
உங்கள் பிரிவினை இவ்வளவு விரைவில்
எவருமே எண்ணவில்லையப்பா
எப்பிறப்பப்பா உங்களை இனி காண்போம்

பிரிவுத் துயரால் வாடும்
அன்பு மனைவி. பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி-6016)

## இளங்கலைஞர் மன்றத்தின்
## இசை விழா

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின்
ஆதரவில்

**ஏழாம் நாள் நிகழ்ச்சிகள்**

**15 - 2 - 93 (திங்கள்) இன்று**

**இடம்: மன்றக் கலாமண்டபம்**

மாலை 4.00 — 5.00 மங்கள இசை

நாதஸ்வரம்:
கோ. முத்துலட்சுமி
சு. தையல்நாயகி

தவில்:
ரி. யுகராணி
உ. செல்வநாயகி

5.00 — 5.20 பாட்டு

எஸ் திலகவதி
எஸ். பவதாரினி
ஆர். காயத்திரி
ஜே அமுதா
ஆர். மைத்திரி
வயலின்: ரி. ரேணுகா
மிருதங்கம்: ரதிரூபன்

5.20 — 5.40 வீணையிசை

என். நளாயினி
ஜே ஜெகன்மோகினி
என் ஜெயந்தினி
ஆர். ருபிணி
மிருதங்கம்: ரி. திருக்குமரன்

5.40 — 6.00 வயலினிசை

கவிதா, வை. பாரதி, கனிஷியா,
பி. சுபத்திரா, ரனிதரா
மிருதங்கம்: பி. ரதிரூபன்

6.00 — 6.45 பாட்டு பிரசாந்தி ராமச்சந்திரன்

வயலின்: ஆர். எஸ் கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாஸன்

இரவு: 6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்

செல்வி த. பேரம்பலம் (முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்)
திருமதி மரகதவல்லி சிவலிங்கம்
திருமதி கலைவாணி சந்திரபோஸ்
தலைவர்: திருமதி மி சிதம்பரநாதன் (இசை விரிவுரையாளர், கோப்பாய் - ஆசிரியர் கலாசாலை)
சிறப்பு விருந்தினர்: செல்வி புஷ்பா செல்வநாயகம்

7.00 — 8.00 இசைக்கச்சேரி

வீணை: நந்தினி விஜயரத்னம்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்
கடம்: கண்ணதாசன்

8.00 — 9.15 கலைவாணர் கலையரங்கம் அளிக்கும்
''சத்தியவான் சாவித்திரி''
புராண நாடகம்

வாழ்த்துவோர் :

# 31 ஆம் நாள் இதய அஞ்சலி

சண்முகவடிவேல் ஜெயநாதனுக்கு ''கானசாகரம்'' பட்டமளிக்கப்பட்டுத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது பருத்தித்துறை தும்பளை தம்புருவளை சித்திவிநாயக ராலய பரிபாலனசபையின் சார்பில் ஆலய பிரதமகுரு சிவசிறி வ வே. நியானந்தராஜக்குருக்களால் திரு. ஜெயநாதனுக்கு 'கானசாகரம்'' பட்டமளிக்கப்பட்டு தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. (25)

1991ஆம் ஆண்டு மட்டக்களப்பிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு உன்னிச்சைப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

லெப். ஈழமணி (முத்தையா மனோகரன் - 1-ம்வட்டாரம், புதுவழி வீதி, களுவாஞ்சிக்குடி - மட்டு.)

நினைவு கூருகின்றோம்.


★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6015)

# 31 ஆம் நாள் இதய அஞ்சலி

**இந்திய அரசின்**
**நயவஞ்சக செயலுக்கு இலக்காகி**
**வங்கக் கடலில் காவியம் படைத்து**
**வீரச்சாவடைந்த**
**10 வீரவேங்கைகளுக்கும்**
எமது 31ஆம் நாள் இதயஅஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்



**விடுதலைப் புலிகளின்மூத்த தளபதியும்**
**சர்வதேச விவகாரங்களுக்கு**
**பொறுப்பாளருமான**

## கேணல் கிட்டு

**உட்பட 10 வேங்கைகளுக்கும்**
எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன்
அன்னார்களது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்

**பணிப்பாளர்களும் பணியாளர்களும்**

| | | | | |
|---|---|---|---|---|
| **மருந்து, பால்மா வகைகள்** (தனியார்) வரையறுக்கப்பட்டது 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | **சஞ்சீவகரணி மருந்தகம்** பிரதான வீதி. சித்தன்கேணி சந்தி, சித்தன்கேணி | **மூலிகை மருந்தகம்** பிரதான வீதி, வட்டுக்கோட்டை | **வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை** 17, கண்டிறோட், சுண்டுக்குளி. யாழ்ப்பாணம் (சி 5979) | **பல்வைத்திய நிலையமும் வைத்திய ஆலோசனை நிலையமும்** 484. [மேல்மாடி] ஆஸ்பத்திரி, வீதி, யாழ்ப்பாணம். |

ப. நோ. கூ. சங்கம்)
திருமதி மரகதவல்லி சிவலிங்கம்
திருமதி கலைவாணி சந்திரபோஸ்
தலைவர்: திருமதி மி சிதம்பரநாதன் (இசை விரிவுரையாளர், கோப்பாய் - ஆசிரியர் கலாசாலை)
சிறப்பு விருந்தினர்: செல்வி புஷ்பா செல்வநாயகம்

7.00 — 8.00 இசைக்கச்சேரி

வீணை: நந்தினி விஜயரத்னம்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்
கடம்: கண்ணதாசன்

8.00 — 9.15 கலைவாணர் கலையரங்கம் அளிக்கும்
''சத்தியவான் சாவித்திரி''
புராண நாடகம்

வாழ்த்துவோர் :

**ரூபன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி
(சி-5965)

## 31-ம்நாள் நினைவஞ்சலி



**கேணல் கிட்டு**
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அமைதி தேடி வந்த புறா
சிறகொடிந்திடவும்,
தமிழீழ தேசம் சோக கடலில்
மூழ்கிடவும் காரணமான
இந்திய அரசை எதிர்த்தொரு
நெஞ்சினம் மூளட்டும்!—குருதி
சிந்திய வேங்கைகளுக்கு அதுவே
அஞ்சலியாய் ஆகட்டும்!

- சீமெந்து பொதுத்தொழிலாளர் யூனியன்
தற்காலிக காரியாலயம்,
நாவலர் றோட், யாழ்ப்பாணம். (4236)

## 45-ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



கிளாலியில் அகால மரணமடைந்த

அமரர்

### சின்னையா கனகசபை

[லிகிதர், மக்கள் வங்கி பருத்தித்துறை]

தோற்றம்: 01 - 01 - 1948

மறைவு: 02 - 01 - 1993

அப்பா வென் றழைத்த வாயால்!
ஐயா வென் றலற வைத்தாய்!
பாசம் ஊட்டி எமை வளர்த்த தந்தையே;
பாரினில் பரிதவிக்கின்றோம் நாம்.

கடந்த 2. 1. 93இல், கிளாலியில் காலனின் கையில் அகப்பட்ட, எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியையின் போது ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன்,

இன்று 15. 02 93இல் எமது இல்லத்தில் நடைபெறு கின்ற அன்னாரது 45ஆம் நாள் நினைவு தினத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

கிராமக் கோட்டடி,
மருதங்கேணி வீதி,
புலோலி
15. 2. 93

மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்

[சி-6000]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### லெப. அமுதன்

(அலோசியஸ் யான்சன்)

ஜனனம்: 04-07-72

வீரச்சாவு: 16-01-93

மூன்று பத்தோடு ஒன்று முடிந்தன நாட்களின்று
ஈண்டு எம் இதயத்துன்பம் அகன்றதோ இல்லை ஐயா
ஆண்டுகள் பல சென்றாலும் மகனே "யான்சன்" உன் இனிய நாமம்
மறந்திட முடியுமோ மகிமை நீயடைந்தாயன்றோ.

களிப்பது மறந்து விட்டோம் கவலையே நிறைந்ததடா
கனிந்த உன்முக எழிலோ கண்முன்னே நிற்குதன்றோ
இனிப்பான சொல்லழகு செவியினில் நிறைந்து நின்று
சிந்தையைக் கலக்குதையா செயல்பட முடியவில்லை.

தந்தையும் தாயினோடு சொந்தமாம் உறவுவிட்டு
உவமையே சொல்லவொண்ணா தலைவனின் அணியிணைந்தாய்
கொஞ்சமும் அஞ்சிடாமல் கொள்கை வழிநடந்து
கொடுத்தீர் உமதுயிரைக் கணமேனும் மறப்போமோ.

இடிபோன்ற இச்செய்தி எம்நிலையைக் கலக்கிடினும்
எம் இனத்தின் இருளகற்ற ஒளி சிந்தும் திரியானீர்
உடலை விதையாக்கி உதிரத்தை நீராக்கி
வீரப்பயிர் வளர்த்து வெகுவிரைவில் பலன்காண்போம்.

இவரது பிரிவால் துயருறும்

சித்தப்பா: சந்தியோ மதியாபரணம் குடும்பத்தினர்.


23, தண்ணீர்தாங்கி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம் 15-02-93.

(4250)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 6-ம் திகதி (6-3-93) யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறுமென யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிவகலாலா அறிவித்துள்ளார். இச் சனசமூக நிலையங்களின் சம்மேளனப் பொதுக்கூட்டத்தில் யாழ் மாநகரசபை, சாவகச்சேரி நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபைகளினதும், யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகளினதும் சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## கடலையும் எரித்தொரு காவியம் பிறந்தது



தளபதி கேணல்

### கிட்டு அவர்கட்கும்,

அவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒன்பது வீரவேங்கைகளுக்கும் 31 ஆவது நாள் நினைவஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- சுதேசிய கலாமன்றம்

(சி 6023)

## காணவில்லை

கைச்சங்கிலி ஒன்று சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையில் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மம்மிட்டி புடைவை நிலையம் சாவகச்சேரி என்றவிலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்

(4285)

குஞ்சண்ணர் என்று அழைக்கப்படும் வேலும் பிள்ளை அருளானந்தராசா என்பவரை 2-1-93இல் கிளாலிப்பாதையில் பயணம்மேற்கொண்ட போது காணவில்லை இவரை பற்றிய தகவல் தெரிந்தோர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

திருமதி வே பரமேஸ்வரி
(தாயார்)
120, சிவன்கோவில் வீதி
திருநெல்வேலி

(4288)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



எம் மண்ணை விட்டுப் பிரிந்தாலும்
எம் மனதை விட்டுப் பிரிக்க முடியாத
தளபதி கேணல்

### கிட்டுவிற்கும்

அவருடன் வீரச்சாவைத் தழுவிய சக ஒன்பதுவேங்கைகளுக்கும்

எமது இதயஅஞ்சலி

அச்சுவேலி தெ. ப. பொ. கூ. சங்கம்
கட்டைவேலி ,, ,, ,, ,,
பருத்தித்துறை ,, ,, ,, ,,
வடமராட்சி தெ. ப. பொ. கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி

திக்கம் வடிசாலை,
அல்வாய்

(3416)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



கடற் புலி

**கப்டன் தமிழரசன் (சியாப்)**

(பரமகுரு உதயகுமார, ஆதிகோவிலடி, வல்வை.)

தரை மலர்வு: 14. 04. 1978 கடல் உதிர்வு: 28. 02. 1992

திதி: 15. 02. 1993

வல்வெட்டித்துறை மண் ஈன்ற தமிழரசா
மக்கள் மானம் காக்க வந்த மறவா
வீறு கொண்டு எழுந்து வந்த வீரன்
நீ விதையாய் விடுதலையாய் மண்ணில்
ஆண்டொன்று ஆனதையா இன்றுடன் - நீ
தாளையடியில் மாவீரனாகியே
அணையாத ஜோதியான தமிழரசா - உன்
நினைவுகள் நீங்கிடுமோ எம் நெஞ்சைவிட்டு

தாளையடியில் இவருடன் வீரச்சாவடைந்த போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

எமது இல்லத்தில் 15 02 93 இன்றுதிங்கட்கிழமை நடைபெறும் திவசக் கிரியைகளில், சகபோராளிகள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆதிகோவிலடி, இங்ஙனம்
வல்வை (4278) - குடும்பத்தினர்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தமிழ் இன விடுதலைக்காக இன்னுயிரை அர்ப்பணித்த

**விடுதலை வீரன் மூத்ததளபதி**

**கேணல் கிட்டுவிற்கும்**

(சதாசிவம் கிருஷ்ணகுமார்) மற்றும்

**லெப். கேணல் குட்டிசிறீ**

மேஜர் வேலன்
கப்டன் ஜீவா
கப்டன் நாயகன்
கப்டன் குணசீலன்
கப்டன் றொசான்
லெப். தூயவன்
லெப். அமுதன்
லெப், நல்லவன்

ஆகியோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகிறோம்.

தாயகத்தை மீட்கும் தாகத்தில் சென்றீர்
மாயவலைக் குட்பட்டு மறைந்து மாவீரரானீர்
தியாகத்தின் திருவுருவாய்-திக்கெட்டும் புகழ்பரப்பி
இதயத்தில் இடம்பெற்றீர் இமயம்போல் வளர்ந்தீரே

காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை.

இடம்பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புச் சங்கம். (4251)

## தீ விபத்தில் காயம்

(கொடிகாமம்)

வீடு ஒன்று தீப்பிடித்த போது தீயை அணைக்க முயன்ற அயலவர் படுகாயமுற்றார் தவசிகுளம் மிருசுவிலைச் சேர்ந்த திரு. சோ. அருணேசன் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை வீட்டார் ஸ்லக்கிளை எரித்த போது தவறுதலாக வீட்டின் மீது தீப்பிடித்ததால் இவர் உடன் தீயை அணைக்க முற்பட்ட போது தீ திடீரென இவர் மீது பிடித்ததால் இவர் படுகாயமுற்றார் எனினும் வீட்டுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை இவர் தற்போது சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (86)

## சிவராத்திரி விழா

(பருத்தித்துறை)

அல்வாய், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இரவு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. த. கலாமணி, பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் நடிக்கும் நாடகங்களும் இடம்பெறவுள்ளன. (25)

## புதிய கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரியில் புதிதாக நிவாரணக் கிளை ஒன்றைத் திறந்துள்ளது.


தனது பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு உதவும் பொருட்டே இந்நிவாரணக் கிளையை அங்கு திறந்து நிவாரணம் வழங்கி வருவதாகத் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (8)

## அரிச்சந்திர மயான காண்டம்

(நெல்லியடி)

நவிண்டில் கலைமதி சனசமூக நிலைய ஆதரவில், அரிச்சந்திர மயானகாண்ட நாடகம் இன்று இரவு நடைபெறவுள்ளது. (30)

## 4 ஆம் வருட நினைவுத்துளிகள்



**2-ம் லெப். சந்திரன்**

(நாகலிங்கம் சிவகுமார்)
[காரைநகர்]

வீரப்பிறப்பு 10-06-1969 வீரச்சாவு 15-02-1989

யாழ் இந்துவின் வீரப்புதல்வனே காரைசிவா
கலங்குகின்றோம் உன்னை பிரிந்து
காரைநகரில் மலர்ந்த மலரே சந்திரன்
எங்கே நீ சென்றாய் ... ... ...

கல்லறையில் துயிலும் மாவீரரில்
ஒன்றாய் நிற்கின்றாயா?
அல்லது காரை மண்ணை எப்போ
மீட்போம் என்று துடிதுடிக்கின்றாயா?

என்றோ ஒரு நாள் காரை மண்ணை
மீட்பார்கள் உன் சகோதரர்கள்
நிம்மதியாய் துயில்வாய் கல்லறையில்
இது உறுதி ... ... ...

இதே நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது நினைவு மலர்கள் - மலரட்டும்

"சந்திரன் இல்லம்"
175. ஓஸ்மானியா வீதி, இங்ஙனம்
யாழ்ப்பாணம். (4287) மாவீரன் சந்திரன் குடும்பம்

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் ஓம்

## 23-ம் ஆண்டு நினைவு தினம் / 31-ம் நாள் நினைவு தினம்





| | |
|---|---|
| எமது குடும்பத்தலைவர் அமரர் | எமது குடும்பத்தலைவி அமரர் |
| திரு. தில்லையம்பலம் சுப்பையா அவர்கள் | திருமதி நல்லம்மா சுப்பையா அவர்கள் |
| வையகம்:- 1910 05-25 | வையகம்:- 1928-12-17 |
| வானுலகம்:- 1969-01-21 | வானுலகம்:- 1993-01-16 |

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து விண்ணுலகு சென்றடைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மரணச்செய்தி அறிந்து வந்து கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

சிவன் கோவிலடி, சாவகச்சேரி, 1993-02-15. (4282)

சகோதரர், மக்கள், மருமக்கள் பேறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிந்தனைக்கு

கல்விக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான் இருக்க முடியும் அது வீரம் ஊட்டுவது.

– ஆல் பிரெட் ஆட்லர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 15 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
க. பெ. எண் - 06

# தமிழீழத்தின் கல்வி

"தாயக விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றிற்குத் தேவையாகவுள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் மாணவ சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமையாகும்."

இவ்வாறு விடுதலைப் புலிகளின் கல்வி குறித்த நிலைப்பாட்டைத் தலைவர் வே. பிரபாகரன் விளக்கியுள்ளார். தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் சிறப்புத் தகைமை பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டும், பரிசில்களும் வழங்கும் வைபவத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது விடுதலைப் புலிகளின் கல்வி தொடர்பான நிலைப்பாடு குறித்து நிலவி வந்த தப்பான அபிப்பிராயங்களைப் போக்குவதான தலைவர் பிரபாகரனின் இவ்அறிவிப்பு, புலிகள் கல்விக்கு எப்பொழுதும் முரணானவர்கள் அல்ல என்பதோடு, அது தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு காப்பரணாக இருக்க வேண்டும் என்ற நியாய பூர்வமான தமது விருப்பத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

இதேவேளை தலைவர் பிரபாகரனின் அறிக்கையானது விடுதலைப் புலிகளின் கல்விக் கொள்கையும் அதாவது கல்வி குறித்த எதிர்பார்க்கையும் இவ் அறிக்கையில் தெளிவுற எடுத்துரைக்கப்பட்டுள்ளது. "எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித் துறை சீரமைக்கப்பட வேண்டும். காலனித்துவ சுரண்டலின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தைத் திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசியபோராட்டம் எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலையையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இன்றைய

# அரச எதிர்ப்பு பத்திரிகை மீது தடை விதிக்கப்பட மாட்டாது

## - பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐலண்ட், திவயின, லக்திவ போன்ற பத்திரிகைகள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கண்டித்து விமர்சித்து வருவதுடன், பொய்ப் பிரசாரங்கள் மூலம் மக்களைத் தவறான வழியில் திசை திருப்பி விட முயல்கின்றன. எனினும் அவை தடை செய்யப்பட மாட்டாது என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

நொச்சியாகமபகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பிரேமதாசா மேலும் கூறுகையில், நியாயம் அற்ற கண்டனங்களைக் கண்டு அரசாங்கம் அச்சப்படத் தேவையில்லை என்றும், மக்களே உண்மையான செய்திப் பத்திரிகைகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண தெரிவுக்குழு

# யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேசவேண்டும்

[கொழும்பு]

"பாராளுமன்றத் தெரிவுக் குழு யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்" இவ்வாறு கம்பகா மாவட்ட சு.க. எம்.பி பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண கொழும்பு ஆயர் யாழ் சென்றதை நான் வரவேற்கிறேன். எந்தவொரு குழுவுடனும் பேசி தீர்வுகாண முடியாது. புலிகளுடன் பேச்சுவார்த்தை செய்தால் மட்டுமே இதனைத் தீர்த்து வைக்க முடியும்.

ஆனால் இன்றுஅரசுஏனைய தமிழ்க்குழுக்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து புலிகளை அழிக்க முயலுகின்றது. அதே சமயம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படாமல் கொழும்பில் இருந்து கொண்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுக்குமாறு கோஷம் போடுவதால் என்ன பயன்? அங்குள்ள சாதாரண பொதுமக்களே பலியாகின்றனர்.

# கிராமிய வளர்ச்சி பயிற்சிக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

சுய சார்பு பொருண்மியத்திற்கு பங்கு கொள்ள கிராம வளர்ச்சியை செயல் படுத்துவதற்கான நோக்கங்கள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 8-ம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படவுள்ளது. இக் கருத்தரங்கில் கிராமிய உற்பத்திக் குழுக்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட 140க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொள்கிறார்கள். இக் கருத்தரங்கில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திணைக்கள தலைவர்கள் போன்றோர்கள் மொத்தம் 22 கட்டுரைகள் சமர்ப்பிக்க உள்ளனர். இக்கருத்தரங்கு தமிழீழ தேசியக் கொடி ஏற்றும் வைபவத்துடனும் மங்கல விளக்கேற்றலுடனும் ஆரம்பமாகும் முதல்நாள் அமர்வு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வன்னி மாவட்டப் பொறுப்பாளர் திரு ரகு தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்டத் தளபதி திரு. கபிலன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம், வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் து. மனோ, சிறப்பு விருந்தினர்களாக திரு. மோகனதாஸ், கிளிநொச்சி கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இக்கியன் ஒஸ்பாம் திரு. க. ச. பத்மநாதன், கிளிநொச்சி வன்னி மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி தருணா ஆகியோர்] கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். [16]

# காரைதீவு அகதிமுகாம் வாசி மர்மமான முறையில் மரணம்

காரைதீவு அகதிமுகாமைச் சேர்ந்த வீரக்குட்டி தேவராஜா (21 வயது) மீன் விற்பதற்காக அயற் கிராமத்திற்கு சென்ற இரு நாட்களின் பின்னர் அவருடைய சடலம் காரைதீவுக் கடலில் மிதக்கக் காணப்பட்டது.

இதுபற்றி மேலும் தெரிய வருவது: சம்பவ தினம் மீன் விற்பதற்கு தனது புதிய சைக்கிளில் சென்ற இவர் அன்று வீடு திரும்பாமையால் அவருடைய மனைவி காரைதீவு அதிரடிப்படை முகாமில் முறையிட்டார். அடுத்த நாள் கழுத்து நெரிக்கப்பட்டு, பல வித சித்திரவதைகள் செய்யப்பட்ட, சடலம் கடலில் கரை பொதுங்கியது.

# நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

[மானிப்பாய்]

நவாலிப்பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கான

# இனப்பிரச்சினைக்கு தீர்வு இன்னும் காணப்படவில்லை

## - ஐக்கியசோசலிசமுன்னணி எம். பி.

சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. இதனாலேயே இன்றைய நிலைதோன்றியது. இன்னும் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளதா? இவ்வாறு கேகாலை மாவட்ட எம்.பி. அதாவுட செனிவிரத்ன

ஏமாற்றி வருகிறது. இன்று கொடுப்பதற்குப் பதிலாக நாளை இன்னும் கூடுதலாக கொடுக்க வேண்டும். அதனை யாவது அரசாங்கம் செய்கின்றதா? இது தொடர்பாக எங்கு போய் முடியுமோதெரியவில்லை என்று கூறியது

# காங்கிரஸ் தலைவர்கள் தமிழக ஆளுநர் சந்திப்பு

(சென்னை)

சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தமது கட்சி எம். எல். ஏக்களுடன் கடந்த சனி தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்தார்.

இதேவேளை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி ஆளுநரைத் தனியாகச் சந்தித்தார்.

பின்னர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் செய்தியாளரிடம் பேசுகையில் சட்டப் பேரவைச் சபாநாயகரும், ஆளுங்கட்சியினரும் இந்திரா காங்கிரஸ் கட்சியினரிடம் ஜனநாயக விரோதப் போக்கில் நடந்து கொண்டதாகக் கூறித் தங்கள் கவலையை ஆளுநரிடம் தெரிவித்ததாகக் கூறினர்.

# காங்கிரஸ் - அ.தி.மு.க. உறவு தொடர வேண்டும்

## - மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங்

(டில்லி)

அ. இ. அ. தி. மு. கவிற்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு தொடரவேண்டுமென மத்திய மனிதவளத்துறை மேம்பாட்டு அமைச்சர் அர்ஜுன்சிங் கூறியுள்ளார்.

திருவனந்தபுரம் செல்லும் வழியில் சென்னை வந்த அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போது, இதற்காகவே பிரதமர் சிறப்பு தூதுவர்கள் இருவரை சென்னைக்கு அனுப்பியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# தமிழக சட்டப் பேரவை கூட்டத் தொடர் ஒத்திவைப்பு

[சென்னை]

தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட்டிற்குமுந்திய குறுகிய காலக் கூட்டத்தொடர்நேற்று முன்தினம் மறுதினம் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இக்கூட்டத் தொடரின் போது ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும், எதிர்க்கட்சியும், இதுவரை தோழமை கொண்டிருந்த கட்சியுமான இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டிருந்ததும், கடைசி இருநாள் கூட்டத்தையும் காங்கிரஸ் கட்சி புறக்கணிப்பு செய்திருந்ததும் தெரிந்ததே.

# தமிழக காங்கிரஸ் தலைவர்கள் புதுடில்லிக்கு அவசர அழைப்பு

(டில்லி)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் இணைத்தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவரான எஸ். ஆர் பாலசுப்பிரமணியமும் புதுடில்லிக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தின் தோழமைக் கட்சிகளான இந்திரா காங்கிரசுக்கும் — அ. இ. அ. தி. மு. க. விற்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பதும், பிரதமரின் விசேட தூதுவர்களாக தமிழகத்திற்கு வந்த மோதிலால் வோராவும், கே. பி. தங்கபாலுவும் முதலமைச்சர் ஜெயலலிதாவையோ அ. தி. மு. க. வின் பொறுப்புமிக்க தலைவர்களையோ சந்திக்காமல் புதுடில்லி திரும்பியது தெரிந்ததே.

இதனிடையே தமிழக காங்கிரஸ் கட்சியின் மற்றுமொரு தலைவரான ஜி. கே. மூப்பனார் பம்பாய் செல்லும் வழியில் புதுடில்லி சென்று பிரதமரும், கட்சித் தலைவருமான பி. வி. நரசிம்மராவை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகள் நூற்றுக்கும் மேல் அழிப்பு

ஈராக்கிடமிருந்த ஐம்பத்திரண்டு ஸ்கட் ஏவுகணைகள் உட்பட நூற்றி ஐம்பத்தொரு ஏவுகணைகள் ஐ. நா. ஆயுத ஆய்வாளர்களால் சேதமாக்கப்பட்டது. அவை சேதமாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. என்று ஐ. நா. ஆயுத ஆய்வாளர் குழு கூறியுள்ளது.

கடந்த வாரத்தில் ஐ. நா. ஆயுத ஆய்வாளர். குழு பக்தாத் போய் சேர்ந்தபோது ஈராக் அரசு எதிர்ப்பு எதையும் காட்டவில்லை என்றும் கூறப்படுகின்றது.

...ஒரு காப்பரணாக இருக்க வேண்டும் என்ற நியாய பூர்வமான தமது விருப்பத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

இதேவேளை தலைவர் பிரபாகரனின் அறிக்கையானது விடுதலைப் புலிகளின் கல்விக் கொள்கையும் அதாவது கல்வி குறித்த எதிர்பார்க்கையும் இவ் அறிக்கையில் தெளிவுற எடுத்துரைக்கப்பட்டுள்ளது. "எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித் துறை சீரமைக்கப்பட வேண்டும். காலனித்துவ சுரண்டலின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தைத் திணிக்கவும் உருவாக்கப்பட்ட கல்வி அமைப்பு மாற்றப்பட வேண்டும். எமது தேசியபோராட்டம் எமது பண்பாட்டு வாழ்வு, எமது தேசிய பொருண்மிய வளம், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலையையும் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இன்றைய அறிவியல், தொழில் நுட்பத்துறைகளின் வளர்ச்சியையும், அதன் ஆக்கப் பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பும் எமது இளம் பரம்பரைக்கு கிட்டுவதற்கு வழி செய்ய வேண்டும். ஒட்டுமொத்தத்தில் எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் பேணப்பட வேண்டும்'' எனக் கல்விக் கொள்கையில் எடுத்துரைக்கப்படுகின்றது.

அதாவது எமது இன்றைய கல்வி அமைப்பு காலனித்துவ ஆதிக்க வாதிகளினால் உருவாக்கப்பட்டது. அது ஆரம்பத்தில் அவர்களின் நலனைப் பேணுவதாகவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் போக்கிலேயே அமைக்கப்பட்டும் இருந்தது. எமது மண்ணின் வளத்திற்கும், தேவைகளுக்கும், மக்களின் அபிவிருத்திக்கும் ஏற்ப அமைக்கப்படவில்லை. ஐரோப்பியர் வெளியேறிய பின்னரும் இக் கல்வி அமைப்பே தொடர்ந்ததாயினும், ஆட்சிக்குவந்த சிங்களப் பேரினவாதிகள் கல்வியின் ஊடாக சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனையையே திணிக்க முற்பட்டார்கள். தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தையும், பண்பாட்டையும் சிதைக்க முற்பட்டார்கள். கல்வியில் தமிழ் மக்களை புறக்கணித்து, தமிழரின் கல்வியையே சிதைக்கவும் முற்பட்டார்கள். அத்தோடு எமது மண்ணிற்கும், மக்களுக்கும் தேவையான கல்வியையும் வழங்கத்தவறினார்கள்.

இந்நிலையிலே தமிழ்மக்களின் இன்றைய கல்வி தமது மண்ணிற்கும், மக்களுக்கும் பயன்பாடற்ற தொன்றாக, எமது இனக்கட்டமைப்பைப் பேணக்கூடிய தொன்றாக அமையவில்லை. அத்தோடு, நவீன அறிவியல் தொழில் நுட்பத்தை மாணவர்களுக்கு வழங்கி பொருளாதார விருத்திக்கு வழி செய்வதாகவும் இருக்கவில்லை.

ஆனால் தலைவர், பிரபாகரனின் கல்விக்கொள்கை குறித்த அறிவிப்பானது, தமிழ் தேசிய இனம் தனது எதிர்கால நலனுக்குத் தேவையான கல்வி அமைப்பு எவ்வாறு உருவாக வேண்டும் என்பதை தெளிவாக விளக்கியிருக்கின்றது.

கல்வியின் நோக்கம் தன்னையும் சிறக்கவைத்து தனது மண்ணையும், இனத்தையும் செழிக்க வைக்க வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இதனை தலைவர் பிரபாகரனின் கல்வி குறித்த அறிவிப்பு துல்லியமாகவே வெளிக்காட்டுகின்றது. அதாவது "கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக் கட்டமைப்பை தாங்கி நிற்கும் தூண்கள்.'' இந்நிலையில் எமது கல்வியனது. எமது தேசியத்தின் விழுமியங்களை உணர்த்தும் உன்னத நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இன்றைய அவசியம்.

---

காரைதீவு அகதிமுகாமைச் சேர்ந்த வீரக்குட்டி தேவராஜா (21 வயது) மீன் விற்பதற்காக அயல் கிராமத்திற்கு சென்ற இரு நாட்களின் பின்னர் அவருடைய சடலம் காரைதீவுக் கடலில் மிதக்கக் காணப்பட்டது.

இதுபற்றி மேலும் தெரிய வருவது: சம்பவ தினம் மீன் விற்பதற்கு தனது புதிய சைக்கிளில் சென்ற இவர் அன்று வீடு திரும்பாமையால் அவருடைய மனைவி காரைதீவு அதிரடிப்படை முகாமில் முறையிட்டார். அடுத்த நாள் கழுத்து நெரிக்கப்பட்டு, பல வித சித்திரவதைகள் செய்யப்பட்ட, சடலம் கடலில் கரை யொதுங்கியது.

...யல் ஒஸ்பாம் திரு. க. ச. பத்மநாதன், கிளிநொச்சி வன்னி மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி தருணா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர். [16]

## நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

[மானிப்பாய்]

நவாலிப்பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கான விசர்நாய்தடுப்பூசிஏறானைசெவ்வாய்க்கிழமை போடப்படவுள்ளது. இவ் விசர் நாய்த் தடுப்பூசியினை ஒவ்வொரு பகுதியாக பிரித்தே போடப்படவுள்ளது. முதலில் நவாலியின் கிழக்குப் பகுதியில் வளர்க்கப்படும் நாய்களுக்கு நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் 8.30மணிக்கும், தெற்குப் பக்கத்தினை உள்ளடக்கிய இடத்தில் வளர்க்கப்படும் நாய்களுக்கு நவாலி வடமதி சனசமூக நிலையத்தில் காலை 10.00 மணிக்கும் மற்றும் வடக்கு மேற்கு பகுதிகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கான தடுப்பூசி நவாலிவடக்கு சனசமூக நிலையத்தில் 12.30 மணிக்கும் போடப்படவுள்ளது

இதுவரை காலமும் தமது வீட்டு நாய்களுக்கு விசர் நாய்த்தடுப்பூசியை போட்டுக் கொள்ளாதவர்கள் குறிப்பிட்ட தினத்தில் தவறாது போட்டுக்கொள்ளும்படி நவாலிப்பகுதி சுகாதார பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். [07]

## இனப்பிரச்சினைக்கு தீர்வு இன்னும் காணப்படவில்லை

- ஐக்கியசோசலிசமுன்னணி எம். பி.

சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை இதனாலேயே இன்றைய நிலைதோன்றியது. இன்னும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளதா? இவ்வாறு கேகாலை மாவட்ட எம்.பி. அதாவுட செனிவிரத்ன பாராளுமன்றத்தில் பேசும் போது கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது, சிங்கள மக்களை அரசு ஏமாற்றி வருகிறது. இன்று கொடுப்பதற்குப் பதிலாக நாளை இன்னும் கூடுதலாக கொடுக்க வேண்டும். அதனை யாவது அரசாங்கம் செய்கின்றதா? இது தொடர்ந்தால் எங்கு போய் முடியுமோதெரியவில்லை என்று கூறியதுடன் தமிழ் மக்களுக்கு என்ன கொடுக்கப் போகின்றீர்கள் என்ற கேள்வியையும் எழுப்பினார்.

## யாழ். மாநகர ஆதனவரி 3 மடங்காக அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரமன்றம் தனது நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளுக்கான ஆதனவரியை 3 மடங்குக்கு மேலாக உயர்த்தியுள்ளது. 1993 ஆம் ஆண்டுக்கான ஆதனவரிகோரி ஆதன உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரங்களிலேயே இந்த அதிகரிபபு செய்யப்பட்டுள்ளது.

இது விடயமாக தெரியவருவதாவது உலகவங்கியும் மற்றும் சிறிலங்காவுக்குக் கடன் வழங்கும் அமைப்புகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே சிறிலங்கா அரசாங்கம் இந்த ஆதன வரியை 3 மடங்குகளுக்கு மேலாக அதிகரித்துள்ளதாகவும் இது நாடு பூராவும் செய்யப்பட்ட அதிகரிப்பென்றும், ஆனால் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ள இந்நிலையில் இவ்வாறான தொரு பெரும் அதிகரிப்பை மக்கள்மேல் திணிப்பதை தாம் எதிர்த்து நடவடிக்கை எடுக்க இருப்பதாக நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ். மாநகர மன்ற வரிசெலுத்துவோர் சங்கத்தினரின் பொதுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## உதைபந்தாட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில், அண்மையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில், நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப்போட்டியில், கரவெட்டி அத்துளு அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம்,இரண்டுகோல்களைப் பெற்று சம்பியன் ஆனது. (30)

## பூங்கா

மேஜர் செங்கதிர் நினைவாக நெல்லியடி சந்தியில் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இம்மாதம் 25 ஆம் திகதி இவரது இரண்டாம் ஆண்டு நினைவு நாளின் போது விடுதலைப் புலிகள் பிரமுகர்களால் இப்பூங்கா திறந்து வைக்கப்படும். (யோ)

## உரம் வைத்திருந்தாராம்; சுவிஸ்பிரசை தேடப்படுகிறார்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பகுதியில் உரம் வைத்திருந்த சுவிஸ்பிரசையை தேடி பொலிசார் வலை விச்சு;

இந்த உரத்தை இவர் விடுதலைப் புலிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்தார் என்றும், விடுதலைப் புலிகள் கண்ணி வெடிகளைத் தயாரிப்பதற்கு உரத்தைப் பெரிதும் பாவிக்கின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சுவிஸ் பிரசை தனது தென்னந் தோட்டத்திற்குத் தேவையான உரத்தை வைத்திருந்தார் என்று தெரிய வருகிறது.

## வீரவணக்க கூட்டம்

இரண்டாம் மாதத்தில் வீரச்சாவடைந்த யாழ். வட்ட வைக்குட்பட்ட மாவீரர்களை நினைவுகூரும் மாவீர வீர வணக்கக் கூட்டம் நல்லூர் வீதியில் உள்ள மருதடிப்பிள்ளையார் கோவில் முன்றலில் இன்றுஇரவு7-30மணிக்குநடைபெறவுள்ளது. இக் கூட்டத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

---

...லிக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தின் தோழமைக் கட்சிகளான இந்திரா காங்கிரசுக்கும் — அ. இ. அ. தி. மு. க. விற்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பதும், பிரதமரின் விசேட தூதுவர்களாக தமிழகத்திற்கு வந்த மோதிலால் வோராவும், கே. பி. ...ரஸ் கட்சியின் மற்றுமொரு தலைவரான ஜி. கே. மூப்பனார் பம்பாய் செல்லும் வழியில் புதுடில்லி சென்று பிரதமரும், கட்சித் தலைவருமான பி. வி. நரசிம்மராவை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகள் நூற்றுக்கும் மேல் அழிப்பு

ஈராக்கிடமிருந்த ஐம்பத்திரண்டு ஸ்கட் ஏவுகணைகள் உட்பட நூற்றி ஐம்பத்தொரு ஏவுகணைகள் ஐ. நா. ஆயுத ஆய்வாளர்களால் சேதமாக்கப்பட்டது. அவ்வது சேதமாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. என்று ஐ நா. ஆயுத ஆய்வாளர் குழு கூறியுள்ளது.

கடந்த வாரத்தில் ஐ நா. ஆயுத ஆய்வாளர். குழு பக்தாத் போய் சேர்ந்தபோது ஈராக் அரசு எதிர்ப்பு எதையும் காட்டவில்லை என்றும் கூறப்படுகின்றது.

## 10 வேங்கைகளுக்கு

இதுவே எமது போராட்டத்தை உயர்த்தியது'' இவ்வாறு இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகி தெரிவித்தார்.

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் உரையாற்றும் போது இன்று எமது போராட்டத்தில் படைக்கப்படும் வரலாறுகள் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் எமது போராட்டத்தின் தன்மைகளை உலகுக்கு உணர்த்தும் என்றார்.

மேலும் இக்கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழன் ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பல கலை நிகழ்வுகளும் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி ஜெயா பேசும்போது எமது போராட்டத்தின் மூலம் இந்த மண்ணும் மக்களும் பூரண சுதந்திரம் பெற்று விடுதலையடைவார்கள் என்பதனாலேயே எமது போராளிகள் சாவை விருப்புடன் சந்திக்கத் தயாராக உள்ளனர் பூரண சுதந்திரமும் விடுதலையும் பெறும்வரை எமக்கு அடுத்துவரும்சந்ததி இப்போராட்டத்தை தொடர்ந்து நடாத்தும் என்ற கனவுடனேயே போராளிகள் வீரச்சாவடைகின்றனர். நாம் அவர்களது கனவை நனவாக்குவதே அவர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும் என்று கூறினார்.

## மார்ச் 14ல்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த 6-2-93, 7-2-93 ஆகிய நாட்களில் கைலாசபதி கலை அரங்கில் மேடையேற்றப்படவிருந்த குழந்தை - ம. சண்முகலிங்கத்தின் திரிசங்கு சொர்க்கம் என்னும் நாடகம் எதிர்வரும் மார்ச் 14 ம் திகதியன்று மேடையேற்றப்படும்

## எறிகணை

இரவு 7 மணியளவில் அம்பனைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சிறுமோதல் சம்பவம் நடைபெற்றதாக தெரியவருகிறது

## மனித

ஊடாக இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

பிரிட்டிஷ் பாராளுமன்ற மனித உரிமைகள் குழுத் தலைவர் லோர்ட் அவெரி கனேடிய பாராளுமன்ற மனித உரிமைகள் உப குழுத் தலைவர் வோரென் மக்கிம் ஆகியோரிடம் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## யாழ்.

மேலும் 80 சதவீமான பிரசவங்களின் போது நிறை குறைந்த பிள்ளைகள் பிறந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. தாய்மாருக்கு போதியளவு சத்துணவு கிடைக்காமையே இவ்வாறான பிரசவங்களுக்கு காரணம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

## 81 படையினருக்கு

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஈழநாதம்

### தட்டுப்பாடு இல்லையாம்

வடபகுதியில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் மருந்து பொருள்களுக்கு தட்டுப்பாடு எதுவும் நிலவவில்லை என்று சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதுடில்லி பேரணி

### திட்டமிட்டபடி நடக்கும் பாரதீய ஜனதா அறிவிப்பு

(டில்லி)

திட்டமிட்டபடி எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதியன்று புதுடில்லியில் பேரணி நடத்தப்படும் என்று பாரதீய ஜனதாக்கட்சி தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் பேரணிக்குமத்தியஅரசு தடை விதித்திருப்பது தெரிந்ததே. கான்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய ஜோஷி மேலும் கூறுகையில்; நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் பற்றி மத்திய உள்துறைஅமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டுமெனவும் கோரிக்கைவிடுத்தார்

### கருத்தரங்கு

எதிர்வரும் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் விசேட கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு சங்கானை பாரதி விளையாட்டு மைதானத்தில் இன்று திங்கட்கிழமை மாலை ஆறுமணியளவில் இடம்பெறவுள்ளதென சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. பதி அண்ணா தெரிவித்துள்ளார்.

மேலும் செவ்வாய்க்கிழமை மாலை ஆறுமணியளவில் வட்டு-கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு : 1967 - 02 - 25  இறப்பு : 1989 - 02 - 15

### செல்வரட்ணம் சுதர்சன் (சுதன்)

மாமூலை - முள்ளியவளை

ஒரு தாயின் வயிற்றினில் ஒன்றாக இருந்தோமே,
ஒரே நாளில் பிறந்தோமே-ஒற்றுமையாய் வளர்ந்தோமே,
உன் முகத்தைப் பார்த்து - என் முகத்தை தெரிந்தேனே,
உன் உருவில் நான்திரிய - என் உருவில் நீ திரிந்தாய்
எவரோ கோப தீர்ப்பதற்கு - உன் உயிரை பறித்தாரே.
உன் உயிரை பறித்தாலும் - எம் உறவை பிரித்தாலும்
எம்மினத்தின் விடுதலைக்கு நாளோ வெகுதூரமில்லை.

- சகோதரன் திவாகர்

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அம்மம்மா,
அண்ணா. தங்கை, தம்பி,
மற்றும் உற்றார், உறவினர்.

## 45-ம்நாள் நினைவஞ்சலி

மலர்வு 06 — 10 — 1978  உதிர்வு 02 — 01 — 1993

### கந்தசாமி ஜெயபாலமூர்த்தி

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

## 31-ம் நாள் நினைவு



### கப்டன் குணசீலன்

[மைக்கல் ஜீவா]

வீரஜனனம் 25-1-1971  வீரச்சாவு 16-1-1993

தங்கக்கிட்டுவுடன் துணையாய் நீவந்தாய்
தமிழீழம் காக்க உன்னையே நீ முடித்தாய்
மங்கா நினைவுடனே நீ என்றும் வாழ்கின்றாய்
பிறந்தநாளன்று பிள்ளை நீ வருவ யென்று
கொள்ளை ஆசையுடன் நாமிருக்க
மண்ணைக்காக்க நீ உயிர்பிரிந்த
செய்தி கேட்டு செய்வதறியாது நின்றோம்
உயிருள்ளவரை உன் நினைவால் வாழுகின்றோம்.

மணியந்தோட்டம் — குடும்பத்தினர்
உதயபுரம் (4290)

## 31-ம் நாள் நினைவும் அந்தியேட்டியும்


# கேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் அவர்களின் கிரியைகள் 15-02-93 இன்று காலை 8.30 மணியளவில் ஊறணி தீர்த்தக் கரையிலும், 10 30 மணியளவில் வேம்படி, வல்வெட்டித்துறை இல்லத்திலும் இடம்பெறும். மேற்படி கிரியைகளிலும்; மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

நன்றி

## 45-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 16 — 05 — 1951  இறப்பு 02 — 01 — 1993



அமரர்

### ச. பாலசுப்பிரமணியம் (துரை)

(சரஸ்வதி பேக்கரி உரிமையாளர் கொடிகாமம்)

அண்ணா! துரையண்ணா - ஆழ்கடலில்
உயிரை அர்ப்பணித்த அரும் பெரியோர்
விண்ணுலகு உனையனுப்ப விரைந்தனர்
எம்மாதிரி ஐயா மனது கொண்டார்
இம் மாநிலத்தை நீ துறக்க வைத்தவர்கள்
இல்லாமல் போவதுண்மை எம் துரையே!
சொல்லாமல் கொள்ளாமல் சென்றுவிட்டாய்
சொல்லியழ வகையின்றித் தவிக்கின்றோம்
ஊழியர் நாம்-
அண்ணா என்றழைத்து சோதரராய்
வேற்றுமையின்றி அன்பில் பழகிய நாட்கள்
வேதனை தருகிறதே என் செய்வோம்
உன் மரணம்-
தம் சாதனை என நினைத்தால் நிச்சயம்
ஏமாந்து போவதுண்மை உலுத்தர்கள்

எத்தனை வடிவங்களில் எம் மினமும்
செத்து மடிந்து அழிகையிலே நீயும்
இத்தனை கெதியில் போனதேனோ?
உன் கனிகள்-
சென்றவிடம் நாடியவர் செய்தி கேட்க
சென்ற நீயும்
செத்துவிட்ட செய்தியென்ன பெரியவோ,
அன்றி...
பெரும் புயலால் அலைவுற்ற படகோவென
உன்குடும்பம் - பற்றுவைத்தோர்
பதறுநிலை பாராயோ ஐயா!
அவர் முகம் மலர
குளிர் மதியில் ஓர் தடவை தோன்றுவாயோ?

குடும்பத்தினர்
கொடிகாமம். சரஸ்வதி பேக்கரி ஊழியர்கள்
(4286)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 14-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8296

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-5964, 28-8589, 28 2829, 28-8037, 42-1182, 24-2359, 26-3628, 26 4648, 24-1205, 41-5417, 26-3177, 42-0962, 24 8588, 22 5857, 42-3726, 26-5281

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-5416, 24-5623, 27-1836, 24-4361, 24-7087

அவர் முகம் மலர
குளிர் மதியில் ஓர் தடவை தோன்றுவாயோ?

குடும்பத்தினர்
கொடிகாமம். சரஸ்வதி பேக்கரி ஊழியர்கள்
(4286)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 - 10 - 1978 | 02 - 01 - 1993 |

**கந்தசாமி ஜெயபாலமூர்த்தி**

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ் குட்டியப்புலம், அ. த. க. பாடசாலை, வசாவிளான்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை அ. வி ச.
[4279]

## 31-ம் நாள் நினைவும் அந்தியேட்டியும்

# கேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் அவர்களின் கிரியைகள் 15-02-93 இன்று காலை 8.30 மணியளவில் ஊறணி தீர்த்தக் கரையிலும், 10 30 மணியளவில் வேம்படி, வல்வெட்டித்துறை இல்லத்திலும் இடம்பெறும். மேற்படி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

நன்றி

வேம்படி,
வல்வெட்டித்துறை. (4284)
குடும்பத்தினர்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

14-02-93

எமது பதிவின் உள்ள கடைசி இலக்கம்: 8296

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-5964, 28-8569, 28 2829, 28-8037, 42-1182, 24-2359, 26-3628, 26 4648, 24-1205, 41-5417, 26-3177, 42-0962, 24 8588, 22 5857, 42-3726, 26-5281

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-5416, 24-5623, 27-1836, 24-4361, 24-7087, 27-6704, 26-0375, 27-0991, 27-4162, 27-1542, 26-3356, 24 5437, 27-3927, 41-8629, 26 786, 26 3812, 40-3073, 28 4672 42-7312, 41-7297, 28-1706, 22-3611

# வீர வணக்கம்

தமிழீழ விடுதலைக்கு எதிராகத் தொடரும் இந்திய வல்லாதிக்க அரசின் இன்னொரு சதி 16-1-93 அன்று வங்கக்கடலில் நடந்தேறியது. அனைத்துலக கடல்பரப்பில் வைத்து இந்திய அரசு கைதுசெய்ய முற்பட்டபோது இயக்க மரபுக்கு ஏற்ப தாம் வந்த கப்பலையும் தகர்த்து வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு எங்கள் வீரவணக்கங்கள்.



**மூத்ததளபதி கேணல் கிட்டு** (சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை

| | | |
|---|---|---|
| லெப். கேணல் குட்டிசிறி | கப்டன் ஜீவா | லெப். அமுதன் |
| மேஜர் வேலன்/மலரவன் | கப்டன் றொசான் | லெப். நல்லவன் |
| கப்டன் குணசீலன் | கப்டன் நாயகன் | லெப். தூயவன் |

பொங்கிடும் கடலில் புலிமற வீரர்
போய்வரக் கூட முடியாதா - நாம்
எந்தையர் கடலில் எழுந்திடக் கூட
இந்திய நாடு தடைதானா?
எங்கே! எங்கே வேங்கைகள் எங்கே!
இந்திய அரசே பதில் சொல்லு-

- மன்னார் மக்கள்

(ஜி 6024)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது